ஜூன் 21-கல்வித் திட்ட எதிர்ப்பு நாள்

திராவிடநாடு

மலர் 11 | 14—6 53 | இதழ் 50

விலை 2 அணா

தி. மு. க. தோழர்களே! தயாராகுங்கள்!!

தூங்கும் புலியை எழுப்புகிறார் ஆச்சாரியார்

மாணவ உலகுக்கு வேடி வைக்கிறார்

பெற்றோர்களே! ஆசிரியர்களே! அதிருப்தி காட்டுங்கள்

———

தி. மு. க. கிளைக் கழகத் தோழர்காள்!

ஆச்சாரியார் கொண்டுவந்திருக்கும் குலதர்மக் கல்வித் திட்டத்தை எதிர்த்துப் போராடவேண்டுமென, அரசகோணம் பொதுக்குழு முடிவு செய்திருப்பதை அறிவீர்கள்.

அதற்கான நாளாக ஜூன் 21 ஞாயிற்றுக்கிழமையை முடிவு செய்திருப்பதையும் அறிவீர்கள்.

எதிர்காலத்துக்கு உலைவைக்கும் இந்த ஏற்பாட்டினை, இது சமயம் தடுக்காவிடில் — மாபெரும் துரோகம் செய்தவராவோம், நம் நாட்டுக்கு. இந்தப் பிரச்னை, ஒரு முக்கியமான பிரச்னை.

ஆகவே,

மக்களின் எண்ணத்தை மமதை நிரப்பிய ஆட்சியாளருக்குத் தெரிவிக்கும் பணியில் ஆங்காங்குள்ள கிளைக் கழகங்களும், தத்தமது பணியினைச் செய்தாகவேண்டும்.

ஜூன் 21-ந்தேதி

* நாடெங்கும் கண்டனக் கூட்டங்கள் நடக்கட்டும்.

* புதுக் கல்வித்திட்டம் எத்தகைய சூதெண்ணம் கொண்டதென்பதை விளக்குங்கள்.

* வீடுவீடாகச் சென்று, பெற்றோர்களிடம் கையெழுத்து வாங்கி, கீழ்க்கண்ட முகவரிகளுக்கு அனுப்பி வையுங்கள்.

இந்தக் காரியங்களைச் செய்து, மக்களின் அதிருப்தியைக் காட்டுவோம்! மக்கள்சக்தியை இந்தச் சர்க்கார் அலட்சியமாகக் கருதுமேயானல், அதற்குமேல் தி. மு. க. எடுக்கவிருக்கும் நடவடிக்கைகள், சாதாரணமாகயிருக்கப்போவதில்லை. அதற்கான, அறிவிப்பு நாளே, ஜூன் 21.

கட்சிப் பாகுபாடற்ற இந்தக் காரியத்தில் எல்லோரது கையொப்பங்களையும் வாங்குங்கள்.

ஜூன் 21—எச்சரிக்கை நாள் நாடெங்கும் வெற்றிகரமாக நடக்கட்டும்!

*

கையொப்பம் வாங்கி (மூன்று தாட்களில்) அனுப்பவேண்டிய முகவரிகள்:-

(1) கல்வி இலாகா டைரக்டர்
செகரிடேரியட்
கோட்டை
சென்னை.

*

(2) முதலமைச்சர்
கோட்டை, சென்னை,

*

(3) கல்வி அமைச்சர்
கோட்டை, சென்னை.

'ஜோதி ஜொலித்ததாமே!'

சந்திர பிம்பமோ!
மலர்ந்த சரோஜமோ!!
என்ன தேஜஸ்!
எவ்வளவு தேவகளை!!

*

"ஜோதி, ஜொலிக்கிறது — முகவிலாசம் பார்த்தாயா? — என்ன காரணம், இவ்வளவு பொலிவிற்கு!"

"தூக்கம், அழகைத்தரும். நன்றாகத் தூங்கியிருக்கிறார். அதனுல், முகம் தெளிவாக இருக்கிறது"

"ஆமாம்! ஆமாம்!!"

*

"வெள்ளையனின் விதண்டாவாதப் புத்தி போகவில்லை பாரும்! முகஜோதி, தூக்கத்தால் வந்ததாமே — எவ்வளவு துணிவுடன் கூறுகிறான், இதனை. அவருடைய முகஜோதி, யாருக்குவரும்? உலகிலுள்ள எவருக்கு அவருடைய பிரகாசமான முகம், இருக்க முடியும்?"

*

விமானத்தை விட்டிறங்கினர்! முகவிலாசம் கண்ட நிருபர்கள், திகைத்தார்கள். அவ்வளவு ஒளி வீசிற்று. 'முகஜோதி' குறித்து வந்திருந்த நிருபர்கள் எல்லாம் பேசிக்கொண்டனர். "விமானத்தில் நன்றாகத் தூங்கியிருப்பார்" என்று ஒரு நிருபர் சொன்னார். மறுத்தார், மற்றொருவர்!—என்று இவ்விதம், இலண்டனுக்குச் சென்றுள்ள இந்திய பிரதமர் பண்டித நேருவைப்பற்றி, தேசிய ஏடுகள், தீட்டியுள்ளன.

பண்டிதரின் முகஜோதிக்கு, ஈடு இணையுண்டோ? — என்று, பல இதழ்களுக்குள்ள அன்பையும் அபிமானத்தையும், அவைகள் தீட்டியுள்ள விமர்சனங்கள் தெரிவிக்கின்றன.

காக்கைக்கும் தன் குஞ்சு, பொன் குஞ்சுதான்! தன்னாட்டுப் பிரதமர், பிறநாட்டுப் பிரதமர்களை விடப் பொலிவுடன் விளங்குகிறார் என்று பூரிப்போடு கூறிக் கொள்வதில் தவறொன்றுமில்லை. சராசரி, மனித இயல்பு இது.

ஆனல், அவரது முகஜோதியின் பெருமையைக் குறித்து இவ்வளவு பிரமாதமாகப் பத்திரிகைகள் புகழ்ந்தெழுதியுள்ளனவேயென்று, எலிசபெத் முடிசூட்டு விழா சம்பந்தமாக வெளிவந்திருக்கும் படங்களையெல்லாம் துருவித்துருவிப்பார்த்தோம்.

பண்டிதர் கலந்து கொண்டதாக, வெளிவந்திருக்கும் படங்களிலெல்லாம் அந்த 'ஜோதி'யைத் தேடினோம்.

சந்திரபிம்பமோ! மலர்ந்த சரோஜமோ!!—என்று, பாடலைக் கவனத்தில் மறவாது, தேடித் தேடிப் பார்த்தோம்.

ஜோதி, தென்படவில்லை! ராணியார் அளித்த விருந்தை யொட்டி, காமன்வெல்த் பிரமுகர்களோடு, பண்டிதர் நிற்கும் படம் ஒன்று எல்லா இதழ்களிலும் வெளியாகியுள்ளது. அதனை பார்க்குமாறு தோழர்களை வேண்டிக்கொள்கிறோம்.

ஜோதியா தென்படுகிறது?—இல்லை! துயரம் படர்ந்த முகத்தோடு நிற்கிறார்! கம்பீரமா காட்சி அளிக்கிறார்? இல்லை! கவலைத்தோற்றமே உருவாக நிற்கிறார்!

அவர்கூட நிற்கும், ஒவ்வொரு காமன்வெல்த் பிரதமரையும், பார்த்துவிட்டு பண்டிதநேரு அவர்களின் முகத்தையும் பார்த்தால், அந்தக் கூட்டத்தில் நிற்கப்பண்டித நேருவின் முகம் எவ்வளவு வேதனைப்படுகிறது என்பதை விளக்குகிறது.

நமது தேசிய இதழ்கள், தமது தலைவரைப் புகழ்வதாக நினைத்து, பெருமிதமாக வருணித்துவிட்டன.

ஆனல், அவர், எத்தகைய இடருக்கு மத்தியிலிருந்திருக்கிறார் என்பதை, இவை அறிய முடியுமா?

பண்டிதர், இந்தியாவின் முதல்வர்!—மறுப்பாரில்லை. பிரிட்டன், அவரை, மரியாதையோடு வரவேற்கும் — அதிசயமுமல்ல. ஆனல், இந்த வரவேற்பையும் விருந்தையும் நேரில் அனுபவிக்கும் போது, அவருடைய உள்ளம் என்னபாடுபட்டிருக்கும்?

காமன்வெல்த் பிரதமர்களின் புகைப்படத்தை உற்றுப் பார்த்தேன்—ஏனையோர் முகத்திலிருக்குமளவுக்கு மகிழ்ச்சி, இவர் முகத்தில இல்லை. எப்படியிருக்க முடியும்?

புகைப்படத்தில், குறும்புச்சிரிப்போடு ஆபிரிக்க மலான் காட்சியளிக்கிறான்! அவரருகில் நிற்கும் பண்டிதருக்கு, எப்படி மகிழ்ச்சி வரமுடியும்? மனிதவேட்டையாடுகிறான், ஆபிரிகாவில்—நிறவெறியைக்காட்டி இந்திய மக்களைச் சித்ரவதை செய்கிறான், மலான். அவனருகில், நிற்கிறார்! யார்? இந்தியாவின் முடிசூடா மாணிக்கம்! எப்படியிருக்கும், அவரது உள்ளம்? இதோ, பக்கத்தில், சிரித்த முகத்தோடு பார்க்கிறார், சேனநாயகா! சின்னஞ் சிறு தீவாம் இலங்கையின், பிரதமர். அவருடைய கண்களில் காணப்படும் ஒளி, பண்டிதர் இதயத்தைக் குதூகலத்திலா ஆழ்த்தும்? பாகிஸ்தான் பிரதமர், முகம்மது அலி, புன்முறுவலோடு பார்க்கிறார். பழைய பாசமும், புது நேசமும் அவரது பார்வையில் தென்பட்டாலும், அதில் ஓரளவு கலந்திருக்கும் கேலி பண்டிதருக்குப் புரியாததா? எத்தனை மேனாட்களில், 'பாகிஸ்தான் ஏற்பட முடியுமா?' என்று கர்ஜனையெழுப்பியிருக்கிறார்! இத்தனை இடருக்கு மத்தியிலே சர்ச்சில் துரைமகனும் நிற்கிறார்—வழக்கமான தோற்றத்துடன். சர்ச்சில் சாதாரணமானவரா? "இந்தியர்கள் சுதந்திரமா கேட்கிறார்கள்? எம்மிடம் துப்பாக்கியும் பீரங்கியும் அவைகளைவிடப் பெரிய ராஜதந்திரமும் இருக்கிறதென்பதை அவர்களுக்கு உணர்த்துகிறேன!", என்று கர்ஜனை எழுப்பியவர். பண்டிதரைப் பத்துக்குமாறு நான்காண்டுகள், அஹமத் நகர்ச்சிறையில அடைத்துப் போட்டவர். அவரது அருகில் நேரு! பண்டிதரின், முகத்தில், ஜோதி எப்படி ஜொலிக்கும்? மனித வேட்டையாடுவோன் ஒரு பக்கம், மனித உரிமை மறுப்பவர் மற்றோர் பக்கம்; மமதையோடு காணும் கண்கள் ஓரிடத்திலிருந்து—இந்தச் சிலந்திக்கூட்டில் சிக்கியவர் முகத்தில், மகிழ்ச்சி எங்ஙனம் அரும்ப முடியும்?

தேசிய இதழ்கள், லண்டனுக்கு நேரு சென்றது, எலிசபெத்அரசியின் முடிசூட்டு விழாவில் கலந்து கொண்டதையும், விருந்து விழாக்களில் கலந்து கொள்வதையும் பெருமைக்குரிய விஷயமாகக்கருதுகின்றன.

பெருமைக்குரிய விஷயமா, இது? சிரிக்கும் சிலந்தி, கொத்தும் கழுகு, கொடுமைப்படுத்தும் ஓநாய், வேட்டை செய்யும் புலி, இவைகளுக்கு மத்தியில் அகப்பட்ட மானின் நிலையிலிருக்கிறார் பண்டிதர்! என்பதை அவரன்றி, வேறு யார் உணரமுடியும்?

*

"வெள்ளைக்காரர்களை, மூட்டை முடிச்சுகளோடு விரட்டுவேன் என்றாயே, தப்பி முடிந்ததா! இன்னும் எமது ஆட்கள், எத்தனை பேர், தோட்ட முதலாளிகளாகவும் ஆலையரசர்களாகவும், அங்கேஇருக்கின்றனர்—இந்தியா, சுதந்திரக் குடியரசு என்கிறாய்! மறுக்கவில்லை—ஆனல், அந்தக் குடியரசில், எமது ராணியின் பிரஜைகளும் இருக்கிறார்கள். அவர்களுக்கு பட்டமளித்திருக்கிறோம்? தடுக்கமுடியுமா, உன்னல்! சுயராஜ்யம் பெற்றாய் — ஆனல், எமது கரத்தோடு உனது கைகள் கட்டுண்டுதான் இருக்கின்றன. தெரிகிறதா?" என்று சர்ச்சில் கேட்கவேண்டாம், "குட்பார்னிங், மிஸ்டர் நேரு!" என்று அழைக்கும் குரலில் இந்த மிடுக்கு தென்படாமலா, இருக்கும்! 'அரசு விடுதலை பெற்றாய். ஆனல், உன் ஏனைய நடவடிக்கைகள் யாவும் எமது கைகளுடன் பிணைக்கப்பட்டிருக்கின்றன. என்ன செய்யமுடியும் உன்னல்? எமது வர்த்தகப் பிரபுக்களின் பிடி, இன்னும் நீங்கவில்லை! நாணய மதிப்பை, நான் குறைத்தால், நீயும் குறைக்கவேண்டியதில்லைதான்' என்ன சர்ச்சில் கூறவா வேண்டும்? "காமன் வெல்த்தின் ஒரு உறுப்பினர்—மாபெரும் இந்தியாவின் பிரதமர், என்று நேரு அறிமுகம் செய்து வைக்கப்படலாம், பிறருக்கு. அதைக் காணும், ஆபிரிக்க மலான், என்ன

(அடுத்தபக்கம் பார்க்க)

கழகத் தோழர்களுக்கு

தி. மு. க. சம்பந்தமான எல்லாச் செய்திகளையும், இனிமேல் கழகத் தினசரியான 'நம்நாடு' அலுவலகத்துக்கு அனுப்புமாறு கேட்டுக் கொள்கிறோம்.

திராவிடநாடு

காஞ்சி] 14—6—53 [ஞாயிறு

நாம் அறியோம்

★

நமது முதலமைச்சர் இருக்கிறாரே—அன்பர் ஆச்சாரியார், மகிழ்ச்சிப் பெருங்கடலில் மூழ்கி மூழ்கி எழுந்தபடி இருக்கிறாராம். தாங்க முடியவில்லையாம் அவருக்கு ஏற்பட்டிருக்கும் மகிழ்ச்சியை. ஆச்சாரியார் ஆசனப்பீடம் ஏறியது நாட்டின் நன்மைக்குத்தான் என்பது இப்போது அவர் சொல்லித்தான் தெரிகிறது! ஒரு நாட்டின் முதலமைச்சர் மகிழ்ச்சியால் கூத்தாடுகிறார் என்றால், அதனை ஒரு விளையாட்டாகக் கருதிவிட முடியுமா? சொந்தத்தில் நன்மை அடைந்தவர்கள் மகிழ்ச்சி அடைந்து ஆடிப்பாடி ஆனந்தக்கண்ணீர் விடுவது போல் ஆச்சாரியாரின் மகிழ்ச்சியையும் எண்ணிவிட முடியுமா? அப்படி எண்ண அவர்தான் விட்டு விடுவாரா?

அவருக்கு ஏற்பட்ட மகிழ்ச்சி சொந்தத்தில் ஏற்பட்ட மகிழ்ச்சி அல்லவே அல்ல. நாட்டின் பொதுவில் ஏற்பட்ட மகிழ்ச்சி! அரசியல் உலகில் தற்சமயம் ஏற்பட்டிருக்கும் அமைதி இருக்கிறதே! அதைப் பார்த்ததும் அன்பர் ஆச்சாரியாருக்கு அளவு கடந்த மகிழ்ச்சி உண்டாகியிருக்கிறதாம்! என்ன அந்த அமைதி? எந்த அரசியல் உலகிலே ஆச்சாரியார் அமைதியைக் கண்டார்? கனவிலா? நினைவிலா? ரஷ்யாவிலா? சைனாவிலா? எங்கே அதனைக் கண்டார்? எப்படிக் கண்டார்?

காங்கிரஸ் சர்க்கார் கூறிக்கொள்ளும் அகண்ட இந்தியாவிலா? இருக்காதே! சொல்லமாட்டாரே! அந்த அளவுக்கு முழுப் பொய் பேசும் துணிச்சல், அன்பர் ஆச்சாரியாருக்கு ஏற்படாதே! ஒருவேளை சென்னை மாகாணத்தைப் பொறுத்த வரையில், 'அரசியல் அமைதி' நிலவுகிறது—அது காண மகிழ்ச்சி உண்டாகிறது என்று கூறுவதற்கும் இல்லையே! சென்னை மாகாணத்தில் தான், மற்ற மாகாணங்களைவிட அதிகமான அரசியல் கொந்தளிப்பு ஏற்பட்டிருக்கிறது. அரசாங்கத்தால் தாங்கமுடியாத அளவுக்கு வேலையில்லாத் திண்டாட்டம், பஞ்சம், பசி தற்சமயம் சென்னை மாகாணத்தைத்தான் கவ்விக்கொண்டிருக்கிறது.

இந்த நிலையில் அரசியல் உலகில் அமைதி நிலவுகிறது என்று கூறிப் புளகாங்கிதமடைகிறார் அன்பர் ஆச்சாரியார். அவர் கூறும் 'அரசியல் அமைதி' எதுவென்பது நமக்குப் புரியவில்லை. அரசியல் அமைதி என்பது ஒரு அரசியலின்கீழ் வாழும் மக்களின் அமைதியையே குறிக்கும். அதாவது அந்த மக்கள் எந்தவிதமான தொல்லைக்கும் ஆளாகாமல் நல்லமுறையில் வாழ்கிறார்கள்—அரசாங்கம் அதற்காவன செய்கிறது அதனால் அமைதி நிலவுகிறது என்றே நாம் கருதுகிறோம் ஆனால் ஆச்சாரியாரின் "அமைதிக்கு"ப் பொருள் யாதோ நாம் அறியோம்.

சென்னை மாநாடுகள்

ஜூலை 11, 12

சனி—ஞாயிறுகளில்

முதல் நாள்: சீர்திருத்த மாநாடு

தலைவர்: எஸ். வி. லிங்கம்

திறப்பாளர்: ஆர். பாலகுருசாமி

கொடியேற்றுபவர்:

இளமுருகு பொருட்செல்வி

இரண்டாம் நாள்:

அரசியல் மாநாடு

தலைவர்: சிவ. சண்முகசுந்தரம்

திறப்பாளர்: எஸ் வீரபாகு

மாநாட்டில் பொதுச் செயலாளர் சி. என் ஏ-வும் பிற முன்னணி வீரர்களும் கலந்து கொள்வர்

கே. எம். கண்ணபிரான்

வ. கு. தலைவர்

ஏ. ஆர். சேஷாசலம்

வ. செயசந்திரன்

செயலாளர்கள்

ஏ. கண்ணப்பன்

பொருளாளர்

தொண்டர் படை:—

சேங்குட்டுவன்

டால்மியாபுரம் போராட்டம்

———

மு. கருணாநிதி சுற்றுப் பயணம்

———

மாவட்ட முழுமையும் கூட்டங்கள்

——

டால்மியாபுரம் போராட்டத்தையொட்டி போராட்டக்குழுவின் தலைவரான கலைஞர் மு கருணாநிதி, திருச்சி தோழர்களான எம். எஸ். மணி, ஏ. பி. தர்மலிங்கம் ஆகியோருடன் கீழ்க்கண்டவாறு சுற்றுப் பிரயாணம் செய்வார். ஆங்காங்கு, கழகச் சார்பில் பொதுக் கூட்டங்கள் சிறப்பாக நடைபெறும்.

ஜூன் 15—மணமேடு
,, 16—மணப்பாரை
,, 17—காட்டுப்புத்தூர்
,, 18—குளித்தலை
,, 19—கரூர்
,, 20 – வேலாயுதம்பாளையம்
,, 21—திருச்சி & உறையூர்
காலை:- மதுரை ரோடு தி.மு.க. திறப்புவிழா.
மாலை:- ஆச்சாரியார் கல்வித்திட்ட எதிர்ப்புக்கூட்டம்.
,, 22—அரியலூர்
,, 23—சின்னதாராபுரம்
,, 24—நேரூர்
,, 25—திருவரம்பூர்.

27, 28, தேதிகளில் விருதுநகர் மாநாட்டில் கலந்துகொள்வார். 29, திருவாரூர் 30, வெங்கிடங்கால் கூட்டங்கள். என்று திருச்சித் தோழர் எம். எஸ். மணி எழுதுகிறார்.

நடக்க இருப்பது

——

சேவூர்:-20—6—53-ல் தி.மு.க. மூன்றாம் ஆண்டுவிழா ஏ. எல். சி. கிருட்டிணசாமி தலைமையில் நடைபெறும். தோழியர் அருண்மொழி துவக்கி வைக்க, தோழர்கள் ஈ. வி. கே. சம்பத், விக்கிரவாண்டி ஏ. கோவிந்தசாமி எம். எல் ஏ. ஆகியோர் சொற்பொழிவாற்றுவர். இரவு 'நச்சுக் கோப்பை' நாடகம் நடைபெறும்.

(முன் பக்கத் தொடர்ச்சி)

செய்வான்? சர்ச்சிலைப் பார்த்துப் புன்சிரிப்பை வீசுவான்! ஆஸ்திரேலிய சகோதரா, கனடாவின் பிரதமரே, ஜமைகா தீவின் தோழரே, நியுஜிலந்து நண்பரே, நமது வெள்ளை இனத்தின் ராஜதந்திரம் மிக மிக மேலானதுதான். நீங்கள், வாணிபவேட்டையாடுகிறீர்கள், இந்தியாவில்? நான்மனித வேட்டையாடுகிறேன், ஆபிரிக்காவில்! இந்தியர்களை நாயைப்போலச் சுட்டு வீழ்த்துகிறேன்! — நானும் நீங்களும் சகோதரர்கள், நமது மத்தியில் இந்தக்கோழை!!" என்று தனியாகச் சந்திக்கும்போது பேசி பேசாமலா இருப்பான்? பேசவேண்டாமே, மற்றப் பிரதமர்களின் கைகளைக் குலுக்கிவிட்டு, நேருவின் அருகில் வரும்போது, இருவரின் நிலையும் நினைப்பும் எப்படி இருக்கும்? இத்தகைய சூழ்நிலையில் சிக்கி இருக்கும் பண்டிதரின் முகத்தில் ஆனந்தஜோதியா அரும்பும்! ஒளியா வீசும்!

இதனை, தேசிய ஏடுகள், சிந்தித்துப் பார்க்கவில்லை —அதனால்தான் ஆர்வத்தோடு, தீட்டிவிட்டன. அவரது முகம் சந்திரபிம்பமோ! மலர்ந்த சரோஜமோ! என்று, வெள்ளை நிருபர்களால், போற்றப்பட்டதாக.

*

பண்டிதர் இலண்டனுக்குச் செல்லுமுன் கெய்ரோவில் இறங்கி, எகிப்திய புரட்சிவீரர் நகிபுடன், சிறிதுநேரம் அளவளாவிவிட்டுச் சென்றாராம்.

எகிப்தின் நகிபைச் சந்தித்துவிட்டுச் சென்ற தியாக வீரர், சுதந்திர ஜோதி பண்டிதரின் முகத்தில் எப்படி ஆனந்தமிருக்க முடியும்?

"ஹலோ! பண்டிட்ஜீ — எங்கே பயணம்?"

"தெரியாதோ, தளபதி? இங்கிலாந்துக்குத்தான்!"

"இங்கிலாந்துக்கு! உங்களை அடிமைப்படுத்தி வாட்டியது மன்றி, இன்னும் தன் வேட்டைக்காடாகக் கருதும் வெள்ளைக்காரப் பிரபுக்கள் வாழும் இங்கிலாந்துக்கா?"

"என்ன நகிப்! என்னமோ, சொல்லுகிறீர்களே!"

"ஒன்றுமில்லை—இந்த முடிசூட்டு விழாவில் எகிப்து கலந்துகொள்ளவில்லை. தெரியுமோ?"

"ஏன், நகிப்?"

இவ்விதம், இருவர்க்குள்ளும், உரையாடல் நடந்திருக்காவிட்டாலும், ஒருவரையொருவர் சந்திக்கும்போது, ஒவ்வொருவர் உள்ளத்திலும் இந்த எண்ணங்கள் எழும்பாமலா இருந்திருக்கும்.

நகிபைச் சந்தித்துச் சென்ற நேருவின் முகத்தில், மகிழ்ச்சி எப்படி இருக்கமுடியும்?

"மாவீரன்போல் இருந்தேன் — இன்று, யாரை எதிர்த்தேனோ, அவர்களுடன் குலாவவேண்டியவனானேன! கரங்களிலே சங்கிலி பூட்டிய சர்ச்சில், புன்சிரிப்போடு பார்க்கிறார். சுயராஜ்யம் பெற்றும் அவர்களது தொடர்பை இழக்கமுடியவில்லை, என்னால். நேற்று வந்த நகிப் முரசு கொட்டுகிறார்! முடிசூடிகளை அழிக்கும் முன்னேற்றக் கருத்துள்ளவன் நான் என்று அடிக்கடி பேசியிருக்கிறேன். ஆனால், இன்றோ? முடிசூடும் விழாக் காணும் நிர்ப்பந்தத்துக்காளானேன்! ஏனெனில். இந்தியாவுக்கும் இங்கிலாந்துக்கும் இடையில், நான் வராவிடில், மனமாச்சரியம் ஏற்படும். அத்தகைய நிலைக்கு ஆளாகிவிட்டேன். அருகே மலான்! இதோ, சேனநாயகா! என்னை முகம்மது அலீ, பார்க்கிறார்" என்று பண்டித நேருவின் இதயம் துடிக்காமலா, இருந்திருக்கும்? இதயம் குழம்பிக் கிடந்தது என்பது புகைப் படத்தைக் காணும்போது தெரிகிறதே! இதைப் புரிந்துகொள்ளவில்லை, தேசிய ஏடுகள்.

பெருமிதமாகத் தீட்டினர், பிரதமரின் விஜயத்தை.

மாபெரும் விடுதலை நாட்டின் வீரனின் மதிப்பு, முடிசூடு விழாவில் கலந்து கொள்வதன் மூலம்தான் சிறக்கமுடியுமா?—ஆம், என்போர், உண்டு,

ஆனால், நாம், வெட்கப்படுகிறோம்! அந்தளவுக்கு, வெள்ளை வர்த்தகர்களின் பிடியில் சிக்கிய நேரு போன்றோரைக் கண்டு.

பண்டிதர். மவுண்ட்பேட்டன் பிரபுவின் மாளிகையில் வாசம் செய்கிறார்! மான்செஸ்டர் பிரபுக்களின் கைலாகு பெற்றார்! லங்காஷயர் பிரபுக்கள் வாழ்த்தினர்!—எனும் சேதிகள் அல்ல, பண்டிதரின் புகழ் ஜோதி தக் கிடைக்கவேண்டியவை.

பிரபுக்களின் விருந்து கிடைப்பதும், உல்லாச விடுதிகளில் உணவருந்தும் 'பாக்யம்' கிடைத்ததாக மகிழ்வதும் — பண்டித நேரு போன்ற மாபெரும் உபகண்டத்துத் தலைவனுக்கு, பெரியதோர் விஷயமல்ல.

ஆனால், அவையே பெருமைக்குரிய விஷயம் என்று, தேசிய ஏடுகள் கருதுகின்றன.

நீக்ரோவின் கையிலிருந்து ரோஜா மாலையல்ல—சாதாரண கனகாம்பர மாலை — நேருவின் கழுத்தில் சூட்டப்படுகிறதென்றால், அது கோடி விருந்துகளுக்குச் சமம்! ஆலையில் உழலும் ஆங்கிலேயத் தொழிலாளியின் கரம், கைகுலுக்கியது என்றால், அது, சர்ச்சில் தந்த விருந்தைவிட எவ்வளவோ சிறந்தது.

பண்டிதர், அவைகளைப் பெறவில்லை! காரணம், அவர்களை அல்ல, அவர் சந்திப்பது!!

எத்தகைய வீழ்ச்சி, இது? மான், புலிக்கூண்டில்! விரோதியின் அருகில் வீரன்—துரோகியின் அருகில், ஒரு நாட்டின் விடுதலைக்காகப் போராடிய தியாகி!—வெட்கித் தலைகுனிய வேண்டிய விஷயம்—ஆனால், நமது ஏடுகளோ, பெருமைக்குரிய விஷயம் என்கின்றன!

பலே, மடுவில் வீழ்ந்தது! பண்டிதர், பண மோகினியின் வலையில் வீழ்ந்தார்!! — சரிதம், இச்சம்பவத்தைக் கண்ணீரால் எழுதத் தொடங்கி, ஐந்தாண்டுகள் ஓடிவிட்டன.

அதன் ஒரு காட்சிதான் வெள்ளையரிடம், பண்டிதர் விருது பெறுவது.

இந்த ஆசை, இவருக்கா எழும்புவது? — என்று, நாட்டு வாழ்வுக்காகப் போராடும் முற்போக்கு உள்ளங் கொண்டவன், கேட்பான்.

ஆனால், அன்றைய பண்டிதர் நேருவா, இன்று இருப்பது.

சுயராஜ்ய காலத்தின் பண்டிதர் என்றால், இதுபோன்ற சூதுக் குழியில், பங்கு, ஏற்பார்?

இன்றைய பண்டிதர், ... இருப்பவர்! வளைந்து கொடுத்து வாழவேண்டியவராகிவிட்டவர்!!

அதனால்தான், இலண்டன் பிரபுக்களிடம் உலவுகிறார்

இலண்டன் புறப்பட பம்பாயில் விமானம் ஏறு முன் பம்பாய்க்கு ஐந்து மைல் தொலைவிலுள்ள டாடாவின் மாளிகைக்குச் சென்றுவிட்டுப் புறப்பட்டார்.

இங்கே, டாடாவின் விருந்து!

அங்கே வெள்ளைப்பிரபு விருந்து

ஐயோ, வீரரே உமக்கா இந்த வீழ்ச்சி?—என்று சரிதம் கண்ணீர் சிந்துகிறது.

நமது தேசிய ஏடுகளோ 'ஆனந்த ஜோதி – இதைப் பாரீர்' என்று தீட்டித் தள்ளுகின்றன!

★

★ சிட்டுக் குருவிமேல் அரிசி மூட்டை! ★

"என் சிங்காரத் தங்கம்!" — என்று சின்னஞ்சிறு குழந்தைகளை, ஆசைத் தாய், அணைத்துக்கொள்ளும் காட்சியைக் கண்டிருக்கிறோம்.

*

உடல்மட்டுமல்ல, உள்ளமும் அப்பழுக்கின்றி, இளம் பிஞ்சுபோலத்துவளும் குழந்தைகளைக்காண, கொடுங்கோலன் மனதிலும், அன்பு சுரக்கும்.

*

"வீட்டில் குழந்தைகள்; தோட்டத்தில் மலர்கள்" என்றான் ஒரு கவிஞன். குழந்தையின் மழலைச் சொல் குழலையும் யாழையும் மிஞ்சும்!—என்கிறார், திருவள்ளுவர்.

*

பத்து வயதுக்குட்பட்ட அரும்புப் பருவமுள்ள குழந்தைகளை, கொடுமைக்காளாக்கப் போகிறேன், என்கிறார் — அன்பர் ஆச்சாரியார். அவர், கல்வித் துறையில் கொண்டு வந்திருக்கும் மாறுதல், அரும்புகளைக் கசக்குவதாகும்! பிஞ்சை, வெம்பச் செய்வதாகும்! — என்று, நல்லறிவாளரெல்லாம் கூறுகின்றனர்.

ஆச்சாரியாரோ, கல்வி அமைச்சரையும் கல்வி இலாகா டைரக்டரையும், தம்மிஷ்டப்படி ஆடவைத்துத் தகாத திட்டமொன்றைக்கொண்டு வந்துள்ளார்.

அவரது நோக்கம், வருணாச்சிரம தர்மத்தை நிலை நிறுத்துவதாகும்.

வயோதிகர்களுக்கு — அதிலும் சனாதனிகளுக்கு —ஏற்படும் வழக்கமான ஆசை, ஆச்சாரியாரை, ஆட்டி வைக்கிறது.

இத்திட்டத்தின் ஆபத்து குறித்து, பல்லாண்டுகளாகக்கல்வித் துறையில் பணியாற்றிவரும், "ஆரம்பக்கல்வி" எனும் இதழ், வேதனையோடு தீட்டியிருப்பதைத் தோழர்கள் காணவேண்டுகிறோம்.

இத்தகைய தீய திட்டத்தை எதிர்த்துத்தான் வரும் ஜூன் 21ல தி. மு. க. கண்டன நாள் நடத்த இருக்கிறது. (ஆர்.)

*

அரும்புகள் கருகும்—ஆபத்து

ஆச்சாரியார் திட்டம் அநாகரிகம்

'ஆரம்பக்கல்வி' கண்டனம்

"வெறும் குமாஸ்தாக்களின் உற்பத்திச் சாலைகளாகமட்டுமே இருக்கின்றன நம்முடைய பள்ளிக்கூடங்கள். இந்த நிலை இனியும் நீடிக்கக் கூடாது. தொழிற்கல்வியை மாணவர்கட்கு அளிக்கும் சிறந்த நிலையங்களாகவும் அவை விளங்கவேண்டும்"

"நம் நாட்டு மாணவர்களெல்லாம் கேவலம் புத்தகப் பூச்சிகளாக வளர்ந்து வருகிறார்கள். அதனால்தான் அவர்கள் பிற்காலத்தில் வாழ்க்கையில் உயரிய நிலையை அடையமுடியாமல் போய்விடுகிறது"

"நம் நாடும் பிற நாடுகளைப்போல முன்னேற்றமடைந்து சீரும் சிறப்பும் பெற்றுத் திகழவேண்டுமானால், நம் நாட்டு மாணவர்கள், வெறும் புத்தகப் படிப்பை மட்டுமல்ல, தொழிற் படிப்பையும் கூடவே படித்தாகவேண்டும்"

"தொழிற் படிப்பையும் கல்விப் படிப்போடு இணைத்து படிக்கும் நல்ல முறை உருவாகாத வரையில் நம் மாணவர்கள் வெறும் ஏட்டுச் சுரைக்காய்களாகத்தான் இருப்பார்கள். அவர்களைக் கொண்டு நம் நாட்டைச் சிறப்படையச் செய்யலாம் என்கின்ற எண்ணமும் வெறும் கனவாகத்தான் இருக்கமுடியும்"

"தொழில் செய்வது இழிவு என்கிற எண்ணம் நம் மாணவர்கள் உள்ளத்தில் ஆழ்ந்து பதிந்திருக்கிறது. இந்த எண்ணத்தை உடனடியாக மாற்றியாகவேண்டும். தொழில் புரிவதுதான் உயர்ந்தது என்கிற மனப்போக்கை அவர்கள் நெஞ்சத்தில் பதியவைக்கவேண்டும்"

ஆம்! சென்ற பல ஆண்டுகளாகவே நம் நாட்டின் தலைவர்களும் அறிஞர்களும், அரசியல்வாதிகளும் கல்வி நிபுணர்களும் இப்படியெல்லாம் வீரமுழக்கமிட்டு வருகிறார்கள். அதிலும் இந்தியத் துணைக் கண்டம் விடுதலை வாழ்வு பெற்றுவிட்ட பிறகு இந்த ஏழு ஆண்டுகளாக இந்த வீர முழக்கம் நாளுக்கு நாள் அதிகமாகிக்கொண்டு வருகிறது. ஏனைய பலரையும் விட மத்திய அரசாங்கத்தையும், மாகாண அரசாங்கங்களையும் நடத்திச் செல்லும் நல்லறிவாளர்கள், இந்த முழக்கத்தைச் சற்று உரத்த குரலிலேயே எழுப்பிவருகிறார்கள்.

இந்த முழக்கம் தவறான அடிப்படையிலிருந்து தோன்றி வளர்கிறது என்று யாரும் கூறிவிட முடியாது.

இந்தியாவின் எழுச்சிக்கும் வளர்ச்சிக்கும் இந்த முழக்கம் தேவையில்லை என்றும் எவரும் இயம்பிவிட இயலாது.

இந்த முழக்கம் தேவை—நிச்சயமாகத் தேவை. இந்தியாவின் எதிர்காலம் சிறப்புள்ளதாக அமைய வேண்டுமானால் இந்த முழக்கம், அடிக்கடி மட்டுமல்ல, உரத்த குரலிலேயும் எழுப்பப்பட்டுத்தான் ஆகவேண்டும். ஆட்சியாளர்கள் மட்டுமல்ல, நாட்டின நலத்தை நாடும் நல்லறிவாளர்கள் அத்தனை பேரும் இந்த முழக்கத்தை எழுப்பித்தான் ஆகவேண்டும்.

மாணவர்கள் வெறும் புத்தகப் பூச்சிகளாக மட்டும் இருத்தல் ஆகாது. தொழிற் கல்வியும் பெற்றாகவேண்டும் அவர்கள். ஆமாம்! நிச்சயமாகப் பெற்றாகவேண்டும்! வேண்டியதில்லை என்று யாரும் கூறிவிட முடியாது!

மாணவர்களுக்குத் தொழிற் கல்வியையும் கற்றுத் தரவேண்டியது அவசியம்தான்.

ஆனால் எந்த வயதுள்ள மாணவர்களுக்குக் கற்றுத்தரவேண்டும்?

இதுதான் இப்போது எழுந்துள்ள பிரச்சினை.

சென்னை ராஜ்யத்தின் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டுள்ள ராஜாஜி சர்க்கார், கிராமப் பகுதிகளில் உள்ள ஆரம்பப்பள்ளி மாணவர்களுக்குத் தொழிற் கல்வியைக் கற்றுத்தரவேண்டும் என்று கருதுகிறார்கள். அந்த எண்ணத்தை அடிப்படையாக வைத்து, மூன்று மணி நேரம் கல்வி — மூன்று மணி நேரம் தொழில் என்கிற புதிய சீர்திருத்தத்தை ஜூன் மாதம் முதல் நடைமுறைக்குக் கொண்டுவர முடிவும் செய்துவிட்டார்கள்.

ஆரம்பப்பள்ளி மாணவர்களென்றால் முதல் வகுப்பு முதல் எட்டாம் வகுப்புவரையில் பயிலும் இளங் குழந்தைகள்.

அவர்களுடைய வயது ஐந்து முதல் பதின்மூன்றுவரை.

உலகம் தெரியாத சிறுவர்கள் அவர்கள். உடலும் உள்ளமும் போதுமான அளவு வளர்ச்சி பெறாத நிலையில் இருப்பவர்கள். அன்றுதான் அரும்பிய முல்லை மொக்குகள் போன்றவர்கள்.

தொழில் எதையும் செய்யக் கூடிய அளவுக்குப் பக்குவம்பெறாத —முறுக்கேறாத, பிஞ்சுஉடல் அவர்களுடையது.

சாதாரண புத்தகக் கல்வியைக் கூட மிகுந்த சிரமத்தோடுதான் அவர்கள் கற்றுக்கொள்ளமுடியும். அவ்வளவு இளம் உள்ளமும் இளைய உடலும் படைத்தவர்கள் அந்தக் குழந்தைகள்.

இந்த உண்மையை நன்றாக உணர்ந்த காரணத்தால்தான், இந்த நூற்றாண்டில் தோன்றிய கல்வித் துறை வல்லுநர்கள் பலரும், தானே கற்றல்—விளையாட்டின் மூலமாகக் கற்றல்—முதலிய இந்த முறைகளின் வழியாகத்தான் அவர்களுக்குக் கல்வியைக் கற்றுத்தர வேண்டுமே தவிர, மிரட்டி உருட்டிப் படிக்க வைக்கிற பழைய முறை கூடாது என்பதை அழுத்தந் திருத்தமாகத் தெரிவிக்கிறார்கள்.

சின்னஞ்சிறு பிஞ்சுக் குழந்தைகளைக் கடினவேலைகள் செய்யும்படி வற்புறுத்துவது ஜீவகாருண்யம் ஆகாது. அது பெருங்குற்றம்.

இதனை நன்றாக அறிந்த காரணத்தால்தான் பதினான்கு வயதுக்கு உட்பட்ட குழந்தைகளை எந்த முதலாளியும் தன் தொழிற்சாலை அல்லது அலுவலகத்தில் வேலைக்கு அமர்த்திக்கொள்ளக்கூடாதென்று ஆட்சியாளர்கள் தொழிற்சாலைச்சட்டம் (Factory Act) இயற்றியிருக்கிறார்கள்.

இந்தக் காரணங்களையெல்லாம் முன் வைத்துத்தான் நாம் கூறுகிறோம். ஆரம்பக் கல்வியில் சீர்திருத்தம் என்கிறபெயரின்கீழ் பதினான்கு வயதுக்கு உட்பட்டகுழந்தைகளைத் தினந்தோறும் மூன்று மணி நேரம் தொழில் புரியும்படி வற்புறுத்துவது தவறு, தவறு என்று.

மேல்நாடுகளில்கூட மாணவர்களுக்குத் தொழிற் கல்வியைக் கற்பிக்கத்தான் செய்கிறார்கள். ஆனால் ஆரம்பப் பள்ளி மாணவர்களுக்கு அல்ல அவர்கள் தொழிற் கல்வியைக் கற்பிப்பது! கல்லூரி மாணவர்களுக்கும் உயர்நிலைப்பள்ளி மாணவர்களுக்கும்தான் தொழிற் கல்வியை அவர்கள் அளிக்கிறார்கள். அப்படிச் செய்வதுதான் நியாயம். அதுதான் முறை. தொழில் புரிவதற்குப் பக்குவமான வயதும், உடலும், உள்ளமும் படைத்தவர்கள் அந்த மாணவர்கள்தான்.

அமெரிக்காவில், பி. ஏ. எம். ஏ. முதலிய வகுப்புக்களில் படிக்கும் மாணவர்கள், தங்களுடைய ஓய்வு நேரங்களில், தினசரிப் பத்திரிகைகளை விற்கும் சிறுவர்களாகப் பணியாற்றுகிறார்கள். வீதி கூட்டும் தோட்டிகளாக வேலை பார்க்கிறார்கள். தங்களுடைய ஹாஸ்டல்களைப் பெருக்கியெடுத்துக் குப்பை கூட்டும் பணியாட்களாகத் தொண்டாற்றுகிறார்கள். இப்படியெல்லாம் செய்வதை இழிவு என்று அவர்கள் கருதுவதில்லை. இப்படிச்செய்வதன் மூலமாக அவர்களுக்கு நிரம்பப் பணம் கிடைக்கிறது. இப்படிக் கிடைக்கும் பணத்தைக்கொண்டே கூடியவரையில் தங்களுடைய கல்லூரிக் கல்விக்கான செலவைச் சரிக்கட்டிக்கொள்கிறார்கள் அந்த மாணவர்கள்.

இதே வகையான உணர்ச்சி நம்முடைய நாட்டிலேயும் ஏற்படவேண்டும் என்பது நம்முடைய ஆசை. தொழில் புரிவது இழிவல்ல என்கிற எண்ணம் நம் மாணவர்கள் உள்ளத்திலும் பதியவைக்கப்படவேண்டும் என்பது நம்முடைய விருப்பம். தொழிற் கல்வியானது நம் நாட்டு மாணவர்களுக்கும் தரப்படவேண்டும் என்பது நம்முடைய பேராசை.

ஆனால் தொழிற் கல்வியானது, அதனைத் தாங்கக்கூடிய உடலும் உள்ளமும் படைத்த கல்லூரி மாணவர்களுக்கு மட்டுமே தரப்படவேண்டும். அதனைத் தாங்கக்கூடிய சக்தி இல்லாத ஆரம்பப்பள்ளிக் குழந்தைகளின்மீது அது சுமத்தப்படக்கூடாது.

அமெரிக்கா, ரஷ்யா, இங்கிலாந்து முதலிய மேல் நாடுகள் எல்லாவற்றிலும் கல்லூரிகள்—உயர்நிலைப்பள்ளிகள்—இவற்றில் பயிலும் மாணவர்களுக்கு மட்டும்தான் தொழிற்கல்வி அளிக்கப்படுகிறது: ஆரம்பப் பள்ளிக்குழந்தைகளுக்கு அளிக்கப்படுவதில்லை. ஆரம்பப் பள்ளிக் குழந்தைகளால் தொழிற் கல்வியை ஜீரணம் செய்ய முடியாது என்பதை அவர்கள் தெளிவாக உணர்ந்திருக்கிற காரணத்தால்தான் அந்தத் தவறான பாதை வழி அவர்கள் செல்ல முயலவில்லை.

ஆனால் முயல்கிறார்கள் சென்னை ராஜ்ய ஆட்சியாளர்கள். ஆரம்பப் பள்ளிக் குழந்தைகளுக்குத் தினந்தோறும் மூன்று மணி நேரம் தொழிற் கல்வியைத் தந்தாகவேண்டும் என்று முடிவு செய்திருக்கிறார்கள். சிட்டுக் குருவியின் தலைமீது அரிசி மூட்டையை ஏற்றிவைத்தால், அதனை அந்தச் சிட்டு சுமந்து செல்லும் என்று நம்புகிறார்கள்.

அரிசி மூட்டையைச் சிட்டுக் குருவியால் சுமந்து செல்ல முடியும் என்கிற கூற்றை நம்மால் நம்பமுடியவில்லை.

ஆரம்பப் பள்ளிக் குழந்தை நாள்தோறும் மூன்று மணிநேரம் தொழில் செய்து விட்டு, அதன் பிறகு மற்றொரு மூன்று மணி நேரம் புத்தகப் படிப்பையும் பெற முடியும்—அந்த அளவுக்கு அந்தக் குழந்தைகளுக்குச் சக்தி இருக்கிறது என்பதை நம்மால் ஒப்புக்கொள்ள முடியவில்லை.

ஆகவே தான் ஆட்சியாளர்களின் புதிய திட்டத்தை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம். இந்தப் புதிய திட்டம் அமுலுக்கு வரக்கூடாது என்பதை அழுத்தந்திருத்தமாக எடுத்துக் கூறுகிறோம்.

நாம் மட்டுமல்ல, ஆரம்ப ஆசிரியர்கள் அத்தனை பேரும் இந்தத் திட்டத்தை எதிர்க்கிறார்கள்.

அண்மையில் அம்பாசமுத்திரத்தில் கூடிய அம்பாசமுத்திரம் தாலுகா ஆரம்ப ஆசிரியர்கள் மாநாட்டில் இந்தத் திட்டத்தை எதிர்த்துத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

10—5—53 அன்று மங்களூரில் கூடிய சென்னை ராஜ்ய 48-வது கல்வி மாநாட்டின் தீர்மானமும் இந்தத் திட்டத்தை அழுத்தக்

திருத்தமாகக் கண்டித்து, இந்தத் திட்டம் அமுலுக்கு வரக்கூடாது என்பதை வற்புறுத்திக் கூறியிருக்கிறது.

மே மாதம் முதல் வாரத்தில் கூடிய இராமநாதபுரம் ஜில்லா போர்டும் இந்தத் திட்டம் கைவைக்குதவாதது என்பதை எழில்பட விளக்கியிருக்கிறது.

ஒழிந்தே தீரவேண்டும் உபயோகமற்ற இத்திட்டம் என்று சட்டசபை உறுப்பினர்கள் பல பொதுக் கூட்டங்களில் பேசி வருகின்றனர்.

இந்தத் திட்டத்தை எதிர்ப்பதற்காக மாபெருங்கிளர்ச்சி செய்தாக வேண்டும் என்று நூற்றுக்கணக்கான ஆரம்ப ஆசிரியர்களிடமிருந்து நமக்குக் கடிதங்கள் வந்து குவிந்தபடி இருக்கின்றன.

சிறிதளவும் நன்மை பயவாத திட்டம் இது என்று தெளிவாக எழுதியிருக்கிறது சென்னை தினசரி "மெயில்."

22—4—53 அன்று சென்னையில் கூடிய தலைமையாசிரியர்கள் மாநாட்டில், இந்தத் திட்டத்தை வெளியிட்ட கல்வி இலாகா டைரக்டரின் முன்னிலையிலேயே, பற்பல தலைமையாசிரியர்கள் இந்தத் திட்டம் நடைமுறைக்கு வருமானல், ஆரம்பக் கல்வி ஆபத்துக்கு உள்ளாகும் என்பதை விளக்கிக் காட்டியிருக்கின்றனர்.

எத்திசையில் திரும்பினாலும் சரி, இந்தத் திட்டத்திற்கு மகத்தான எதிர்ப்புத்தான்புறப்பட்டபடி இருக்கிறதே தவிர ஆதரவு என்பது அணுவளவும் ஏற்படக் காணோம். எப்படி ஏற்படும்? இந்தத் திட்டத்தைக் கூர்ந்து கவனிக்கிற எவர் தானாகட்டும், இந்தத் திட்டத்தை எப்படி வரவேற்க முடியும்?

காலையில் கல்வி பயில்கிற மாணவர்கள் மாலையிலும், மாலையில் கல்வி பயில்கிற மாணவர்கள் காலையிலுமாக, தங்கள் தங்கள் பெற்றோர்களுடன் இருந்து, தம்தம் குலத் தொழிலைக் கற்றுக்கொள்ள வேண்டும் என்று இந்தத் திட்டம் கூறுகிறது.

கிராமங்களில் உள்ள முக்கியமான தொழில்கள் அத்தனையும் நசித்துப் போய், வறுமையும் வேலையில்லாத் திண்டாட்டமும் தாண்டவமாடுகிற காலமிது. இப்படிப்பட்ட காலத்தில், மாணவர்கள், தம் தம் பெற்றோரின் தொழிலைச் செய்யட்டும் என்று கூறினால்.பெற்றோர்கள், அதனை விரும்பவா செய்வார்கள்?

நெசவாளி, இன்றையதினம் வறுமைத் தேளால் கொட்டப்பட்டு, வேதனைக் கண்ணீர் வடித்துக் கொண்டிருக்கிறான். அவனுடைய கைத்தறி, அதனால் அவனுக்கு வாழ ஏற்படாத காரணத்தால், ஒதுக்கித் தள்ளப்பட்டிருக்கிறது, ஒரு மூலையில்! இந்த நிலையில், அந்த நெசவாளியின் மகனும், அந்தத் தொழிலையே கற்க முன்வந்தால், நெசவாளி, அதனை ஒப்புக் கொள்ளவா செய்வான்?

மழை பொழியாத காரணத்தால் விவசாயம் வேதனையின் வட்டாரமாக மாறிவிட்டது, இது போது. இந்நிலையில் விவசயியின் மகன் தினந்தோறும் பாதிவேளை விவசாயத்தில் ஈடுபட முனைந்தால் அதனை ஏற்கவா செய்வான் விவசாயி?

இந்தத் தொழில்களெல்லாம் இப்போதுதான் நசித்துப்போயிருக்கின்றன — எப்போதுமேவா இப்படி இருக்கும், அவைகள் நல்ல நிலையில் இருக்கும்போது பிள்ளைகள் அந்தத் தொழிலைக் கற்பதில் தவறென்ன என்று ஆட்சியாளர்கள் கேட்கக்கூடும்.

இந்தத் தொழில்கள் நல்ல நிலையில் இருக்கும்போதுகூட, குறிப்பிட்ட ஒரு தொழிலைச் செய்யும் பெற்றோரின் பிள்ளையும் அந்தத் தொழிலையே விரும்புவான் என்பது என்ன நிச்சயம்? நெசவாளியின் பிள்ளையும் நெசவாளியாகவே இருக்க விரும்புவான் என்பது என்ன உறுதி? விவசாயியின் மைந்தன் விவசாயியாகவே வாழ ஆசைப்படுவான் என்று யார் கூறமுடியும்? சலவைத் தொழிலாளியின் மகன் சலவைத் தொழிலாளியாகவே ஏன் இருக்கவேண்டும்? யார் வேண்டுமானாலும் எந்தத் தொழிலை வேண்டுமானாலும் செய்யலாம் என்று இருப்பதுதான் முறையே தவிர, வண்ணான் மகன் வண்ணானாகவே இருக்க வேண்டும்—சக்கிலி மகன் சக்கிலியாகவே இருக்கவேண்டும் — க்ஷவரத் தொழிலாளியின் மகன் க்ஷவரத் தொழிலாளியாகவே இருக்க வேண்டும் என்று சொன்னால் அது எப்படி நியாயமாகும்? அப்படிச் சொல்வதால ஜாதி என்கிற கொடிய ஏற்பாடு நிலைத்து நிற்பதற்குத் தானே வழி ஏற்படும்? ஜாதிபேதமற்ற சமுதாயம் ஏற்பட்டால்தானே நாடு முன்னேற்றமடையும்? அப்படி இருக்கும்போது ஜாதிபேதத்தை மேலும் பலமடையச் செய்யும் இந்தப் புதிய திட்டம் எதற்காக அமுலுக்கு வரவேண்டும்?

எந்தப் பெற்றோருக்காவது குறிப்பிட்ட வேலை என்று ஒன்று இல்லாமல் இருக்குமானால், அப்படிப்பட்டவர்களின் பிள்ளைகள், ஊரில் உள்ள தச்சர், தட்டார் முதலிய யாரேனும் ஒரு தொழிலாளியிடம் தினந்தோறும மூன்று மணி நேரம் தொழில் கற்றுக்கொள்ள அனுப்பப்படுவார்களாம். அந்த இடத்தில் மாணவர்களின் முற்போக்கை அறியவும், மாணவர்களைக் கட்டுப்படுத்தவும், பள்ளிக்கூட ஆசிரியர்கள் எவரும் இருக்கமாட்டார்களாம். அந்தத் தொழிலாளியே தான் ஆசிரியராக இருப்பாராம். மாணவர்களின் வருகையைக் குறிப்பிடும் ஆஜர் பட்டியலையும் அந்தத் தொழிலாளியேதான் வைத்திருக்க வேண்டுமாம். தினந்தோறும் பாதி வேளை, மாணவர்கள், இந்தத் தொழிலாளியிடம் இருந்தாகவேண்டுமாம இப்படியெல்லாம் தெரிவித்திருக்கிறார் கல்வி இலாகா டைரக்டர். சுற்றி வளைத்துப் பேசாமல் சுருக்கமாகக் கூறுவதானால், தினந்தோறும் மூன்று மணி நேரம், பள்ளிக்கூட மாணவர்கள், பள்ளிக்கூடத்திற்குத் தொடர்பே இல்லாத ஒரு தொழிலாளியிடம் ஒப்படைக்கப்பட்டு, அவன் தன்விருப்பம்போல அவர்களிடமிருந்து சமபளம் தராமல் வேலை வாங்கிக்கொள்ள அனுமதி தருகிறார்கள், ஆட்சியாளர்கள். நாம் கேட்கிறோம்—இது நியாயமா? பதினான்கு வயதுக்கு உட்பட்ட சிறுவர்களைச் சம்பளம் கொடுத்துவேலை வாங்குவதே குற்றம்என்றும், அதற்குக் கடுமையான தண்டனை உண்டு என்றும் தொழிற்சாலைச்சட்டம் (Factory Act) தெரிவிக்கும்போது அதே பதினான்கு வயதுக்கு உட்பட்ட பிள்ளைகளிடமிருந்து சம்பளம் தராமலே வேலை வாங்கிக் கொள்ள அனுமதி தருகிறது புதிய திட்டம், இது முறைதானா என்று கல்வித்துறை வல்லுநர்கள் அனைவரும் கேட்கின்றனர் — கேட்பது குற்றமா?

இப்போது தினந்தோறும் ஐந்து மணி நேரம் பணியாற்றுகிறார்கள் ஆரம்ப ஆசிரியர்கள்.

புதிய திட்டம் அமுலுக்கு வருமானல், அவர்கள், நாள்தோறும், ஆறுமணி நேரம் பணியாற்றியாக வேண்டும்.

இவ்வாறாக அதிகப்படி வேலை செய்வதற்கென்று, தனியாக, அதிகப்படி சம்பளம் எதுவும் தரப்படுமா ஆரம்ப ஆசிரியர்களுக்கு. கிடையாது!

இப்போதே, "மிகக் குறைந்த ஊதியம் — ஆனால் மிக மிக அதிக வேலை" என்கிற நிலையில் சிக்குண்டு வாடி வதங்குகிறார்கள் ஆரம்ப ஆசிரியர்கள். எங்களுடைய ஊதியத்தைச் சிறிதேனும் உயர்த்தித் தாருங்கள் என்று கிளர்ச்சிக் குரல் எழுப்பி வருகிறார்கள். ஆனல் ஆட்சியாளர்களோ அவர்களுடைய ஊதியத்தை உயர்த்தவில்லை வேலைப் பளுவை உயர்த்துகிறார்கள்! புண்ணின் கொடுமை போக மருந்து கேட்கிறார்கள் ஆசிரியர்கள்! ஆனல் ஆட்சியாளர்களோ மருந்து கொடுக்கவில்லை. வெந்த புண்ணிலே வேலினை நுழைக்கிறார்கள்.

"அதிக ஊதியம் தருக!"—ஆரம்ப ஆசிரியர்கள் கேட்கிறார்கள்.

"இந்தா அதிக வேலை"—ஆட்சியாளர்கள் தெரிவிக்கிறார்கள்.

இப்படித் தெரிவிப்பது தவறு என்பதை யார் மறுக்க முடியும்?

அத்திப்பழத்தைப்பிட்டால் அத்தனையும் சொத்தை என்றோர் பழமொழி உண்டு.

இந்தப்புதிய திட்டத்தைப் படித்தால் ஆவ்வளவும் தவறு என்பதாக நாம் ஓர் புதிய மொழியை உருவாக்கினால் கூடக்குற்றமில்லை என்று கருதுகிறோம். இந்தத் திட்டம் அவ்வளவு தவறானதாக, அவ்வளவு குற்றமுள்ளதாக, அவ்வளவு அர்த்தமற்றதாக இருக்கிறது.

ஆசிரியர் உலகத்தின் கருத்தை அறிந்து கொண்டுவரப்பட்டதல்ல இந்தத்திட்டம். ஆசிரியர்களின் கருத்தையறிய ஆட்சியாளர்கள் சிறிதாவது எண்ணியிருந்தால் இப்படிப்பட்ட ஒரு திட்டம் உருவாகியே இருக்காது. இவ்வளவு தவறான ஒரு திட்டத்தை உருவாக்க ஆசிரியர்கள் உலகம் ஒருபோதும் ஒப்புக் கொண்டிருக்காது.

ஆனல் ஆட்சியாளர்கள் ஆசிரியர்களைக் கலந்து ஆலோசிக்காமல், தாங்களாகவே, தங்கள் மனம் போனபடி தீட்டிய திட்டம் இது. ஆகவேதான் இந்தத் திட்டம் இவ்வளவு தீமை நிறைந்ததாக அமைந்திருக்கிறது.

வேண்டாம் இந்தத் திட்டம் என்று ஆசிரியர் உலகம் தெளிவாகத் தெரிவிக்கிறது.

ஆசிரியர்களின் எதிர்ப்பையும் மீறிக்கொண்டு இந்தத் திட்டத்தை நடைமுறைக்குக் கொண்டுவர ஆட்சியாளர்கள் முயல்வார்களானல், அந்த முயற்சியை அறிவாளிகள் எவரும் பாராட்ட மாட்டார்கள்.

இந்தத் திட்டத்தை உடனடியாகக் கைவிட்டுவிட வேண்டும் ஆட்சியாளர்கள். இந்தத் திட்டம் நடைமுறைக்கு வராது என்பதைத் திட்டவட்டமாக அறிவித்துவிட வேண்டும்.

இந்தத் திட்டத்தால் மாணவர்களுக்கும் நன்மையில்லை. ஆசிரியர்களுக்கும் நன்மையில்லை. நாட்டிற்கும் நன்மையில்லை. ஆட்சியாளர்களுக்கும் நன்மையில்லை.

பிறகு, யாருக்காக இந்தத் திட்டம்? யாருக்காக?"

★

சந்தாதாரர்களுக்கு

ஒவ்வொருவரின் முகவரியின் கீழேயும் சந்தா முடியும்தேதி குறிப்பிடப்பட்டிருக்கிறது. அத்தேதிக்கு ஒருவாரம் முன்னதாகவே, பணம் அனுப்பி சந்தாவை புதுப்பித்துக்கொள்ளுங்கள்.

முகவரியை மாற்றும்படி சொல்பவர்கள், சந்தா எண்ணையும், பழைய முகவரியையும் குறிக்கவும்.

மானேஜர்.

மகிழ்வூட்டும் செய்தி!

தி. மு. க. தின இதழ்

ஜூன் 15-ல் வெளிவருகிறது.

கழகத்தின் சொந்த இதழ் | நம் நாடு | கழகத்தின் செல்வக்குழந்தை

பாலூட்டிச் சீராட்ட வாரீர், விரைந்து.

*

கழக நிகழ்ச்சிகளை, கருத்துரைகளை 'நம் நாடு' உங்கள் இல்லம் கொண்டுவந்து, உங்கள் இதயத்தில் பதியச் செய்யும்.

★

இருட்டடிப்பு நீங்கிற்று—ஒளிதர வருகிறது

*

திராவிடத்தின் உரிமை முரசு

*

தி. மு. க. வளர்ச்சியில்—புதியகட்டம்

*

நம் நாடு

தி. மு. க. தோழர்கள் ஆதரவு தாரீர்.

★

'நம் நாடு' டிம்மி சைஸ் 4 பக்கம் தனி இதழ் 1 அணா

ஆசிரியர்: அண்ணாதுரை.

ஏஜண்டுகள் விபரம் அறிய உடனே எழுதவும்.

நம் நாடு—அறிவகம்—ராயபுரம்—சென்னை-13.

'தங்கம்' தணலில்! தரகர், கோபுரத்தில்!!

"சிந்தாமணியாம் என் செந்தேனே! திருப்பதியை நாம் கண்டோமே—"

*

"துர்க்காதேவி—என் சோகுசு நாயகி! துளசி, கொஞ்சம், வாங்கிக்கோ!"

*

இவ்விதம் கீதம் பாடினார்களா, எனும் விபரத்தை, 'இந்து' இதழ் தெரிவிக்கவில்லையே தவிர, ஏனைய நிகழ்ச்சிகளையெல்லாம் ஒன்று விடாமல் பிரசுரித்திருக்கிறது.

திருமலை நோக்கி வந்தார்—
தியாகராஜன் வரவேற்றார்—
அண்ணாரால், மாலை, சூட்டினார்—
பூரணகும்பம் எடுத்தனர்—
பந்தலுக்கு அழைத்துச் சென்றனர்—
வேங்கடேசனைக் கண்டார்—
அர்ச்சனை செய்தார்!

*

சமீபத்தில் தம்பதிகளான நிதி மந்திரி சிந்தாமணி தேஷ்மூக்கும்—திட்டக்கமிஷன் உறுப்பினரான துர்க்காபாயும், 'க்ஷேத்ராடனம்' கிளம்பியிருக்கிறார்கள். துர்க்காபாய், ஆந்திர அம்மை அல்லவா? ஆருயிர்க்காதலனுக்கு ஐயன் அருள் கிடைக்கச் செய்யும் ஆசையோடு, திருப்பதிக்கு இழுத்துச் சென்றிருக்கிறார். அங்கே, நடைபெற்ற, விபரங்களனைத்தையும், 'இந்து', நன்றாகப் பிரசுரித்துள்ளது. இது போல நிகழ்ச்சிகளுக்காகத் தானே, 'இந்து' போன்ற இதழ்கள் இருப்பது? திருமலை சென்ற தேஷ்முக், வெங்கடேசப் பெருமாள் சந்நிதானத்தில் விழுந்து கும்பிட்டு விட்டு, அர்ச்சனையெல்லாம் கண்டு விட்டு ஆரத்தி பெற்று, அன்புடையாளுடன் திரும்பியிருக்கிறார்.

*

"புதுக்காதலர்களின் குதூகலத்தைக் காணப் பொறுக்கவில்லையோ, உன் நெஞ்சம்?", என்று கேட்கத் தோன்றும், உங்களுக்கு.

அவர்கள் காதலையோ அல்லது அதன் விளைவாக 'க்ஷேத்ராடனம்' ஆடுவதையோ, அல்ல—நான் குறிப்பிட விரும்புவது.

வந்தவர், நிதி அமைச்சர்!—அதிலும் பணம் கேட்டால், "இல்லை! ஏது பணம்?" என்று பல்லவி பாடுவதில் கைதேர்ந்த நிதி அமைச்சர். அவர், வந்தார் — திருப்பதியைக் கண்டார்—வெங்கடேசப் பெருமானைத் தரிசித்தார்! அவர்கூட, இந்தியாவை எழில்மிகும் பூமியாக்க 'கிளம்பியிருக்கும்' திட்டக்கமிஷனில் அங்கம் வகிக்கும் துர்க்காபாயும் கணவனோடு வந்து, காணிக்கை செலுத்திவிட்டுப் போயிருக்கிறார்!!

அவர்களுக்கு, திருமலையின் பெருமையை கோயில் பரிபாலனத்தார் விளக்கியிருப்பார்கள்.

வெங்கடேசப் பெருமானின் வைரமுடியையும் காட்டத்தவறியிருக்க மாட்டார்கள்.

அவைகளையெல்லாம் காணும், அமைச்சர், இன்னும் நாலுமுறை கன்னத்தில் போட்டுக் கொண்டிருப்பாரே தவிர, தேசியச்செல்வம், எங்கேபோய் முடங்கிக்கிடக்கிறது என்பதையா, நினைத்திருக்கப்போகிறார்? அப்படி நினைத்தால், அவர் மந்திரியாக இருக்கமுடியாதே!

அவர் என்ன நினைத்தாரோ, என்னவோ—ஆனால், அங்கு நடைபெற்றுக் கொண்டிருக்கும் ஒரு விஷயம் மட்டும், மிகமிகக் கண்ணீர் சிந்தக்கூடிய காரியமாகும்.

அந்தக் காரியம், அரசாங்கத்தின் அனுமதி பெற்றே, செய்யப்படுகிறது.

பொக்கிஷம் வழிய, பொங்கும் இன்பத்தில் கிடக்கும் அரசாங்கம் அல்ல, அந்தக் காரியத்தை அனுமதிப்பது. தேஷ்முகிடம் கையேந்தும், சென்னை அரசாங்கம்.

அதன் அனுமதியின் பேரில் 12 லட்சம் ரூபாய்களை வீணாக்குவதென முடிவு செய்திருக்கின்றனர், கோயில் பெருச்சாளிகள்.

திருமலை வெங்கடேசப்பெருமான் வீற்றிருக்கும் இடத்துக்கு மேலிருக்கும் விமானத்தை தங்கத்தால் அழகு செய்யப்போகிறார்களாம். அதற்கென ரூபாய் பன்னிரண்டு லட்சத்தைச் செலவிடப் போகிறார்களாம்

அதற்கான முதல் காரியமாக வரும் 15ந் தேதி "பாலாலயம்" செய்யப் போகிறார்களாம்! இதென்ன?—என்று கேட்கிறீர்களா? வெங்கடேசப்பெருமானின் "சக்தி"யை ஒரு கும்பத்தில் அடைக்கப் போகிறார்களாம்!!

தங்கம்போடுவதென்றால், ஆண்டவனுக்கு மேல், 'அடிமைகள்' ஏறி நின்று கொண்டுதானே, அந்தக் காரியத்தைச் செய்யும்படி நேரும். அடிமைகள் சூத்திரர்களன்றோ? அர்ச்சகர்களாயிருப்போருக்கு, அக்கார வடிசலை ருசிக்கவும், சூடதீபம் காட்டவும் தெரியுமே யொழிய, கோயில் உச்சியிலேறவும், வர்ணம் பூசவுமான 'இலேசான தொழில்கள் செய்யத் தெரியாதே! ஆகவே, இந்த 'ஏழைகள்' ஏறிப்பூசப் போகிறார்கள், தங்கத்தை!!

ஆண்டவனருகில் இந்தக் கீழ் ஜாதி மக்கள் நெருங்கலாமா? என்ன ஆவது ஆசாரம்! ஆண்டவனுக்கே அடுக்காதே! ஆதலால், வெங்கடேசப்பெருமாளுக் (உருவமல்ல, சிலை தான்!)கிருக்கும் 'சக்தி'யை எடுத்து, தற்போதிருக்கும் அவரது சிலையை சக்தியில்லாததாக்கி, பிறகு அவரருகில் கீழ்சாதியினரை நெருங்கச் செய்து, தங்கம் போடப்போகிறார்களாம்!!

இங்ஙனம் பெருமாளின்சக்தியை, அந்தச் சிலையிலிருந்து பிரித்து, அதனை ஒரு 'கும்பத்தில்' விட்டு வைக்கப்போகிறார்களாம். இப்படி சக்தி மாற்றும் உத்சவத்துக்கு 'பாலாலயம்' எனப்பெயராம். பெருமாளுக்கு இதுவரை செய்யப்பட்டு வந்த அபிஷேக ஆராதனைகள் யாவும் இந்தக் கும்பத்துக்கே செய்யப்படுமாம்.

ஆண்டவன் சக்தியென்ன, இவ்வளவு, அற்பமாயிருக்கிறதே—எடுக்கவும் பின்பு வைக்கவுமான நிலையில்? என்றெண்ணுகிறீர்களா? ஆம், அர்ச்சகர்கள் மனது வைத்தால, எது தான் நடக்காது! 'சிலையிலிருந்து, கும்பத்துக்கு' கூடுவிட்டுக் கூடு பாயப்போகிறது! வெங்கடேசரின் மகிமை!

ஆண்டவன் உயிர், கும்பத்துக்குப் போய்விட்டால் அவருடைய பத்தினி அலர்மேலுமங்கை, என்ன செய்வாரோ? பாபம்! இந்தப்பக்தர்கள், என்னென்ன பாடுபடுத்துகிறார்கள்!!

*

அமைச்சர் தரிசித்துச் சென்ற ஆண்டவன், 'உயிரை' அப்புறப்படுத்தி வைக்கப்போகிறார்கள் — பக்தர்கள். காரணம், அவரிருக்கும் மிடத்துக்குமேல் தங்கம் பூச!

இந்தக் கைங்கரியம், மிக மிகச் செலவு பிடிக்கும் காரியம்என்பதாக தேவஸ்தானத்தார் தெரிவித்திருக்கிறார்கள்.

இவ்வளவு செலவுடன். தங்கம் பூசப்போகிறார்கள்— உலகெல்லாம் ஆளும் பெருமாளுக்கு.

"எங்கேடா, உன் கடவுள்?" என்றுகேட்ட இரணியனைப்பார்த்து "தூணிலுமிருக்கிறான்! துரும்பிலுமிருக்கிறான்! அவனன்றி ஓரணுவும் அசையாது!" என்றானாம, பிரகலாதன். தூணை உதைக்க, அங்கிருந்து நரசிம்மவதாரமாக, விஷ்ணு வந்தாராம்!

இந்தக் காலட்சேபத்தை நடத்தும் பக்தர்களே கூறுகிறார்கள் — பெருமாளின் 'சக்தி' அந்தச் சிலையிலிருப்பதாகவும், அதை 'கும்பத்தில்' மாற்றப்போவதாகவும்.

இந்த விந்தையை, சிந்தையுள்ள மானிட ஜாதிக்கு விட்டுவிடுவோம்!!

*

ஆண்டவனுக்கு தங்கக் கூரை வேயப்போகிறார்கள்.

அதே நேரத்தில், அந்தத் தங்கத்தை, ஆழ்ந்த சுரங்கத்தில்இறங்கி வெட்டியெடுத்து, உயிரையும ஒரு பொருட்டென மதிக்காது பாடுபடும் தொழிலாளர்களின் நிலை எப்படி இருக்கிறது தெரியுமோ?

கோலார் — உரிகம் தங்கச் சுரங்கத்தை, மேற்படி கம்பெனியார்மூடிவிடப்போகிறார்கள்.

சுமார் 3500 தொழிலாளர்களை அனாதைகளாக அலையவிடப்போகிறார்கள்.

எத்தனையோ ஆண்டுகளாக இருந்துவந்த தங்கச்சுரங்கம் மூடப்படப்போகிறது! இதற்கு வெங்கடேசப்பெருமானைத் தெரிசித்துச் சென்றாரே நிதியமைச்சர் அவருடைய சர்க்காரும் அனுமதி தந்துவிட்டது.

உயிரை இழந்தனர்! எத்தனையோ பேர் கை கால்களையும் தத்தம் செய்திருக்கின்றனர், அந்தச் சுரங்கத்தில்! அவ்விதம் இலாபம் தேடித்தந்த தொழிலாளர்கள் வயிற்றிலடித்துவிட்டு, சுரங்கத்தை, வெள்ளைக் கம்பெனியார் மூடப்போகிறார்கள்.

3500 உயிர்கள், தமிழகத்தின் வீதிகளிலே, 'வேலையில்லை!' என்று அலையப்போகிறார்கள்.

அவர்களின் கண்களிலிருந்து கண்ணீர்வழிய ஆரம்பித்துவிட்டது! திருப்பதியாரோ, அவர்கள் தேடித்தந்த தங்கத்தை, கூரைக்குப் பூசுகின்றனர்!!

தங்கம் தந்தோர்தவிக்கிறார்கள்— தாசர்கள் 'பாலாலயம்' நடத்துகிறார்கள்!

ஆண்டவனும் இந்த அக்கிரமத்தைச் சகித்துக்கொண்டிருக்கிறார்! அமைச்சரும் வந்துபோகிறார்! அரசாங்கமோ, அக்கிரமத்தையுடன் இக்தக்காரியங்களை நடத்திவைக்கிறது!

'தங்கம்' தந்தோர் தணலில்! தரகர்கள் கோபுரத்தில்!!

இந்த விசித்திரத்தை, என்னவென்றுரைப்பது?

கேடு விளைவிக்கும் வீண் முயற்சி

மேல் குமாரமங்கலம் பஞ்சாயத்து போர்டின் கூட்டம் தலைவர் வெ. கிருஷ்ணமூர்த்தி தலைமையில் 6-6-53ல் கூடி பின் கண்ட தீர்மானத்தை ஏகமனதாக நிறைவேற்றியிருக்கிறது:

"சென்னை அரசியலார், ஆரம்பப் பள்ளிகளில புதிதாக புகுத்த இருக்கும் கல்விமுறை, பெரும்பாலான திராவிட பிற்பட்ட இன மக்கள், கிராமங்களிலும் சேரிகளிலும் வசிப்பதால், அப்பகுதிகளின் குழந்தைகளின் கல்வியும், அவர்களின் பிற்கால அரசியல், சமூக முன்னேற்றம் பெரிதும் பாதிக்கப்படும் என இச்சபை ஏகமனதாக கருதுவதுடன், இப்புதிய கல்விமுறையை ஆரம்பப் பள்ளிகளில புகுத்தி, எதிர்கால வீர இளைஞர்களுக்குக் கேடு விளைவிக்கும் வீண் முயற்சியை கைவிடுமாறு சென்னை மாகாண முதலமைச்சர் ராசகோபாலாச்சாரியாரை இச்சபை ஏகமனதாக வற்புறுத்துகின்றது."

சிதம்பரத்தில்!

தெ. ஆ. மாவட்ட
மாநாடுகள்

*

ஜூலை 4, 5
(சனி, ஞாயிறு)
தேதிகளில்

*

கைவல்யம் பந்தலில்
மஜீத் அரங்கில்

காதல் ஜோதி
சந்திரோதயம்
நாடகங்கள்

முதல் நாள்
தலைவர்:
க. அன்பழகன் M. A.
திறப்பாளர்:
சி. வி. எம். அண்ணாமலை

இரண்டாவது நாள்
தலைவர்:
சி. பி. சிற்றரசு
திறப்பாளர்:
அரங்கண்ணல்

கலைக் கண்காட்சி திறப்பாளர்
கலைஞர் எம். ஜி. ராமச்சந்திரன்

பேச்சாளர்கள்:- அண்ணாதுரை, நெடுஞ்செழியன், சம்பத், கருணாநிதி, மதியழகன், என். வி. நடராசன், ஆசைத்தம்பி, இளங்கோ, மனோகரன், இளம்வழுதி, பொன்னம்பலனார். இராமாமிர்தத்தம்மையார், சத்தியவாணி முத்து, அருள்மொழி, பூங்கோதை.

கலைச்சொற்பொழிவு:- என். எஸ். கிருஷ்ணன், நடிப்புப்புலவர் கே. ஆர். ராமசாமி, சிவாஜி–கணேசன், எஸ். எஸ். ராஜேந்திரன், டி. வி. நாராயணசாமி.

இன்னிசை:- தமிழிசை வல்லுனர் சி. எஸ். ஜெயராமன், நாகூர் அனீபா, கே. ஆர். செல்லமுத்து.

இரா. பாலகுருசாமி
வ. தலைவர்

தில்லை-வில்லாளன், இரா. சக்கிரவர்த்தி
செயலாளர்கள்.

அரசாங்கப் பொருளாதாரம்

[ஏ. இருதயராஜ், திருச்சி செயின்ட் ஜோசப் கல்லூரிப் பேராசிரியர்]

அரசாங்கக் கடன்

ஒரு குடும்பத்தில் வருமானத்துக்கு மேல் செலவாகும்பொழுதும் எதிர்பாராத ஒரு செலவு ஏற்பட்டபோதும் கடன் வாங்காமல் இருக்கமுடியாது. அதுபோலவே அரசாங்கமும் எதிர்பாராத செலவுகளை மேற்கொள்ளும் பொழுது கடன் வாங்கவேண்டியிருக்கிறது.

ஒருவர் மற்றவரிடமிருந்து கடன் வாங்கும்பொழுது அதற்காக எழுத்து மூலியமாக ஒரு பத்திரம் எழுதிக்கொடுப்பது போலவே பொதுமக்களிடமிருந்து அரசாங்கம் கடன் வாங்கும்பொழுதும் அவர்களுக்குக் கடன் பத்திரங்களை வழங்குகிறது.

அரசாங்கம் ஒரு கோடி ரூபாய் தனக்கு கடனாகத் தேவை என்று தெரிந்தால், அதைப் பத்திரிகைகளின் மூலம் விளம்பரப்படுத்துகிறது. அந்தக் கடனுக்கு எவ்வளவு வட்டி தரமுடியும், எப்பொழுது திருப்பித்தரமுடியும், இதுபோன்ற விவரங்களையும் தெரிவிக்கிறது. சாதாரண மக்களும் கடன் கொடுக்க வசதியாகக் குறைந்த தொகைகளுக்காகவே கடன் பத்திரங்கள் வெளியிடப்படுகின்றன. பெரும் பணக்காரர்கள் தாங்களே அதிகமாகக் கடன் பத்திரங்களை வாங்காதபடிக்கு ஓரளவுக்கு மேல் ஒரு நபருக்கே கடன் பத்திரங்கள் விற்பதில்லை.

பொதுமக்கள் அதிகமான கடன் பத்திரங்களை வாங்கவேண்டும் என்று அரசாங்கம் விரும்பினால் கடன் பத்திரங்களிலிருந்து கிடைக்கும் வட்டிவருமானத்தின்மேல்வருமானவரி விதிக்காமல் இருக்கலாம்.

பாங்குகளில் பணம் போடுவதைவிட, தனிப்பட்டவர்களுக்குக்கடன் கொடுப்பதைவிட, தொழில் துறைகளில் பணத்தை ஈடுபடுத்துவதைவிட, அரசாங்கக் கடன் பத்திரங்களை வாங்குவதனால் பணத்துக்கு பயமில்லை என்று கருதி மக்கள் இக்காலங்களில் அதிகமதிகமாக அரசாங்கக் கடன் பத்திரங்களை வாங்குகிறார்கள்.

அதுவும் இந்தியா போன்ற நாடுகளில் பாங்குகளில் பணம்போடும் பழக்கம் புதிதானதாலும், தொழில் துறைகளில் அதிகப் பணத்தை ஈடுபடுத்தினால் ஆபத்து என்று மக்கள் கருதுவதாலும், மற்ற நாடுகளைவிட இந்தியாவில் அரசாங்கம் அதிக வட்டி தருவதாலும், இந்தியாவில் சாதாரணமாக மக்கள் பாங்குகளைவிட அரசாங்கத்தின்மேல் அதிக நம்பிக்கை வைத்திருப்பதாலும் அரசாங்கக் கடன் பத்திரங்களை வாங்குவதற்கே அதிகம் விரும்புகிறார்கள். இதனால் பாங்குகளின் வளர்ச்சி பாதிக்கப்படுகிறதென்று குறை கூறப்படுவதில் அர்த்தமிருக்கிறது.

கடன் வாங்குவது ஏன்

எதிர்பாராமல் யுத்தம் ஏற்பட்டு திடீரென்று வரி வருமானத்தை அதிகரிக்க முடியாத நேரத்தில் அப்படி வரி வருமானத்தை அதிகரிக்க நினைத்த போதிலும் ஓரளவுக்குமேல் வரி விதிப்பு மீறினால் மக்களிடையே மனக்கசப்பின்றி வசூல் செய்யமுடியாததாலும், யுத்த காலத்தில் மக்களிடையே மனக்கசப்புக்கூடாதாகையாலும் அரசாங்கம் கடன் வாங்க நேரிடுகிறது.

மேலும் யுத்த காலத்தில் நாட்டில் பணப் பெருக்கம் அதிகமாயிருக்கும். அதனால் விலைவாசிகள் ஏறும், அதைத் தடுப்பதற்காக மக்களிடம் தேவைக்குமேல் அதிக பணம் தங்கிவிடாமல் தடுப்பதற்காக கடன் வாங்குவதன் மூலம் அரசாங்கம் பணவீக்கத்தை குறைக்கவும் முடிகிறது.

அரசாங்கம் தன் வருமானத்துக்காக வரியையே அதிகம் நம்பிக்கொண்டிருக்க முடியாது. ஆகவே லாபந்தரும் தொழில்களை எடுத்து நடத்துவது சில சமயங்களில் அவசியமாகிறது. ரயில், டிராம் போன்ற போக்குவரத்து சாதனங்கள், அணைக்கட்டுகள் போன்ற மக்களுக்கு உபயோகமானது; நடைமுறையில் லாபந்தரக் கூடியதுமான பிரம்மாண்டமான முயற்சிகளை எடுத்து நடத்த எத்தனித்தால் பெரும் பணச்செலவு ஏற்படும். அதற்காக மக்களிடம் கடன் வாங்குவதே சிறந்த வழி.

பொது உடைமைக் கொள்கைகளும் சமதர்மக் கொள்கைகளும் பரவி வரும் இந் நாட்களில் சர்க்காரே எல்லாத் தொழில்களையும் எடுத்து நடத்த வேண்டுமென்ற கோஷங்கள் கிளம்புகின்றன. எல்லாத் தொழில்களையும் சர்க்காரே எடுத்து நடத்துவது என்பது நடைமுறையில் சாத்தியமில்லாததும் லாபகரமில்லாததுமான காரியமென்ற போதிலும், ஒரு சில முக்கியத் தொழில்கள் வருமானத்தை உத்தேசித்து சர்க்காரால் நடத்தப்படுவது விரும்பத்தக்கது. அதற்காகக் கடன்வாங்குவதிலும் தவறில்லை.

ஆனால் யுத்தத்திற்காகக் கடன் வாங்குவது அவ்வளவு விரும்பக் கூடியதல்ல. நம்முடைய நடத்தையின் விளைவால் யுத்தம் ஏற்பட்டு அதை நடத்த கடன்களை வாங்கி அந்தக் கடன்களை நமக்குப் பின் சந்ததியார்கள் திருப்பித்தரவேண்டிய சிரமத்தை தேடிவைப்பது நியாயமல்லவென்று சொல்லப்படுகிறது.

யுத்த காலத்தில் பலர் ஏராளமாகப் பணம் சம்பாதிக்கிறார்கள். அவர்களின் மேல் கடுமையான வரி விதிப்பதால் அதிக வருமானம் கிடைக்க வழி இருக்கும் போது கடன் வாங்குவது நல்லதல்ல என்றும் சிலர் அபிப்பிராயப் படுகிறார்கள்.

யுத்தகாலத்தில் ஏழைகளில் அநேகர் தங்கள் உயிரைத் திரணமாக மதித்துப் போரிட்டுக் கொண்டிருக்கும் நேரத்தில் சிலர் யுத்தத்தினால் யாதொரு கஷ்டமோ நஷ்டமோ அனுபவிக்காமல் மேலும் மேலும் பணம் சம்பாதிப்பதில் ஈடுபட்டிருக்கிறார்கள். ஏழைகள் யுத்தத்திற்காகத் தங்கள் ரத்தத்தைக் கொடுத்து உயிரைத் தியாகம் செய்யும் போது, பணக்காரர்கள் தங்கள் பணத்தையாவது கொடுத்துதவ வேண்டியது அவர்கள் கடமை. அதனால் அரசாங்கம் கடன் வாங்குவதைவிடப் பணக்காரர்கள் மேல் யுத்த காலத்தில் வரிகளை விதித்து யுத்தச்செலவை ஈடுசெய்ய வேண்டும் என்று சொல்லப்படுகிறது.

விருதுநகர் மாநாடு
சிறப்புகள்

சிறந்த முறையில் தினசரிமூன்று வேளைக்கும் மாநாட்டில் சாப்பாடு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. ஒரு நாளைக்கு ரூ. 1—8—0.

பெண்கள் மாநாடு நடைபெறுவதால், கழகத் தோழர்கள் தத்தமது குடும்பத்தோடு வருமாறு வேண்டப்படுகிறார்கள்.

மாவட்டத் தோழர்களே!

இரு மாநாடுகளுக்கும் தீர்மானங்கள் அனுப்புவோர் தத்தமது கிளைக் கழகச் செயலாளர் மூலம் 24-6-53க்குள் அனுப்பிவைக்கவும்.

மாவட்ட முழுமையுள்ள தி. மு. க. கிளைகள், கழகப் பெயர் தீட்டிய கழகக் கொடிகளை 3x2 அளவில் அனுப்ப வேண்டுகிறோம்.

இராமநாதபுர மாவட்ட மாநாடுகள்

பாண்டியன் அரங்கில்

ஜூன் 27, 28 சனி ஞாயிறுகளில்

கட்டணம் 2-நாட்களுக்கும்
வரவேற்பாளர் ரு 5
பிரதிநிதி ரு 3
பார்வையாளர் ரு 1
பெண்கள் அணா 8.

விருதுநகர், அழைக்கிறது! வாரீர்!!

27-6-53 — பெண்கள் முன்னேற்ற மாநாடு

தலைவர்: அருண்மொழி பி. ஓ. எல்.

திறப்பாளர்: திருவனந்தபுரம் அன்னமங்கீன் எம். பி.

பேச்சாளர்கள்: மூவலூர் இராமாமிர்தத்தம்மை, சத்தியவாணிமுத்து, டாக்டர் தர்மாம்பாள், தாமரைக்கண்ணி, பொற்செல்வி, லாரன்ஸ்.

டி. கே. ராஜு M. L. A. தலைமையில்

நடிப்புப் புலவர் கே. ஆர். ராமசாமி குழுவினரின் 'ஜமீன் மாளிகை' நாடகம் இரவு நடைபெறும்.

ஏ. வி. பி. ஏ. பரமேஸ்வரி,
வ. கு. செயலாளர்.

உ. இராஜம்மாள்,
(நகரசபை வைஸ் சேர்மன்)
வ. கு தலைவர்.

28-6-53 — அரசியல் மாநாடு

தலைவர்: என். எஸ். இளங்கோ

திறப்பாளர்: எம். எஸ். சிவசாமி

பேச்சாளர்கள்: பொதுச் செயலாளர் அண்ணாதுரை, இரா. நெடுஞ்செழியன், ஈ. வி. கே. சம்பத், மு. கருணாநிதி. இரா. சு. தங்கப்பழம், அ பொன்னம்பலனர். கலைஞர் எம். ஜி. ராமச்சந்திரன், சிவாஜி கணேசன், டி. வி. நாராயணசாமி, எஸ் எஸ். ராஜேந்திரன் கலந்துகொள்வர்.

எம். டி. ராமசாமி எம். பி., ராஜா சிதம்பரம் எம். எல். ஏ. கலந்துகொள்வர்.

வி. வி. ராமசாமி தலைமையில்

மு கருணாநிதி குழுவினர் நடிக்கும் 'பரப்பிரம்மம்' நாடகம் இரவு நடைபெறும்.

ஏ. வி. பி. ஆசைத்தம்பி,
வ. கு. செயலாளர்.

சிவ. சண்முகசுந்தரன்,
வ. கு. தலைவர்.

Edited Printed & Published by C. N. Annadurai M. A., at "Dravida Nadu" Press, 95, Tirukkachinambi St., Kancheepuram